வடபழனியில் உள்ள SRM அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் பதினொன்றாம் ஆண்டு முதலாம் ஆண்டு துவக்க விழா (11th Induction Day ) 28.06.2019 அன்று நடைப்பெற்றது. சிறப்பு விருந்தினர்களாக SRM அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் துணைவேந்தர் முனைவர். சந்தீப் சஞ்செட்டி, பதிவாளர் ந. சேதுராமன், சேர்க்கை இயக்குனர் டி. வி. கோபால் ஆகியோர் பங்கேற்றனர். முனைவர்.க.துரைவேலு, முதல்வர், SRMIST - வடபழநி அவர்கள் வரவேற்புரை வழங்கி விருந்தினர்களுக்குப் பூச்செண்டு மற்றும் நினைவுப்பரிசு வழங்கி மரியாதை செலுத்தினர். அதைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் முனைவர் சந்தீப் சஞ்செட்டி, அவர்கள் பல்கலைக்கழகத்தின் பல்வேறு சிறப்பம்சங்கள் மற்றும் பல்வேறு தணிக்கைகளில் பல்கலைக்கழகம் இந்தியாவில் முன்னிலையில் உள்ளது என எடுத்துரைத்தார். அவருடைய பேச்சு இளம் மாணவர்களிடத்தில் உற்சாகத்தையும் தூண்டுதலையும் உருவாக்கியது. பின்னர் சிறப்புரை ஆற்றிய முனைவர் சேதுராமன் அவர்கள் பல்கலைக்கழக வதிமுறைகள் குறித்து பல்வேறு தரவுகளை பகிர்ந்துக் கொண்டார். முனைவர் டி.வி. கோபால் அவர்கள் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் உள்ள ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள், தொழில் வாய்ப்புகளை பற்றி மிகத்தெளிவாக உரை நிகழ்த்தினார். இவ்விழாவில் புதிய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பெருந்திரளாக கலந்துக்கொண்டனர். மேலும் சில பெற்றோர்கள் சேர்க்கையில் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். இறுதியாக முனைவர் சி. கோமதி, அவர்கள் நன்றி உரையை வழங்கி விழாவை நிறைவு செய்தார்